# நாட்டில் புல் சாப்பிடும் மக்கள் இல்லை சோறு சாப்பிடும் மக்கள்தான் உள்ளனர்!



## மொட்டு எம்.பி. கூறுகின்றார்

"நாட்டில் புல் சாப்பிடும் மக்கள் இல்லை சோறு சாப்பிடும் மக்கள்தான் உள்ளனர். தேர்தலைப் பிற்போட அரசு முயற்சிக்கவில்லை" - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. காரணத்தின் அடிப்படையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டது.

அடுத்த தேர்தலிலும் நாம்தான் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்போம் என உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

நாட்டில் புல் சாப்பிடும் மக்கள் இல்லை சோறு சாப்பிடும் மக்கள்தான் உள்ளனர். எதிரணிகளின் அரசியல் நாடகம் மக்களுக்குத் தெளிவாகப் புரியும்.

கிராம மட்டத்தில் தற்போது கூட்டங்களை நடத்தி வருகின்றோம். எமது பலம் என்னவென்பதை ஜே.வி.பியினர் அங்கு வந்து பார்க்கலாம்." - என்றும் அவர் தெரிவித்தார். (அ)


மாலைக்கதிர்
Maalaikkathir



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை 10.10.2023 கதிர் 89


## இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபைக்கு தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனம்

நாட்டில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபைக்கு, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கமைய, மாலைதீவுகளில் உள்ள ஏர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் சிரேஷ்ட பட்டயக் கணக்காளரும், முன்னாள் ஆலோசகருமான அர்ஜுன ஹேரத் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அரச தரப்புச் சட்டத்தரணி நிசித் அபேசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி சௌமியா அமரசேகர, டிஜிட்டல் சட்ட நிபுணரும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட வரைவுக் குழுவின் தலைவருமான ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்சன ஜயவர்தன, சர்வதேச தர நிர்ணய அமைப்பின்

2▶

## பெரமுன வேட்பாளரே அரியணை ஏறுவார் மஹிந்த ராஜபக்ஷ திடமான நம்பிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன களமிறக்கும் வேட்பாளரே வெற்றியடைவார், என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

யார் அந்த வேட்பாளர் என்று உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வீழ்ந்து போகவில்லை. எமது கட்சி இன்னமும் வீரியத்துடன் இருக்கின்றது. ஆனால், கட்சியின் தலைமைத்துவத்தில் நிச்சயம் மாற்றம் வரும். எந்நாளும் எம்மால் அப்பதவியில் இருக்க முடியாது. புதியவர்கள் மற்றும் இளைஞர்கள் தலைமையேற்க முன்வர வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. உரிய நேரத்தில் அறிவிப்பு விடுக்கப்படும். எமது கட்சி களமிறக்கும் வேட்பாளரே வெற்றியடைவார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் கூறுவதுபோல்தான் இந்த அரசு செயற்பட வேண்டும் என்றில்லை. மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்." - என்றார். (அ)




## எஸ்.ரி.எப். ஜீப் கோர விபத்து இருவர் சாவு அறுவர் காயம்

வவுனியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் நேற்று இரவு 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மடுகந்தை பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கிப் பயணித்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் ஜீப் ரக வாகனம் வெளிக்குளம் பகுதியில் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் வாகனத்தில் இருந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## இமினோகுளோபின் மருந்து பற்றிய விபரங்களெதுவும் வெளியாகவில்லை!

### மருத்துவச் சங்கம் அதிர்ச்சித் தகவல்

நாட்டிலுள்ள நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட இமினோகுளோபின் மருந்தானது எங்கு உற்பத்தி செய்யப்பட்டது எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்பது குறித்த எவ்வித தகவல்களும் தற்போது வரையில் வெளியிடப்படவில்லை, என இலங்கை மருத்துவச் சங்கம் தெரிவித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த நாட்களில் இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்த தரமற்ற மற்றும் காலாவதியான மருந்துகள் காரணமாக நாட்டில் பல்வேறு உயிரிழப்புகள் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

2▶




## லெப்டினன்ட் மாலதியின் 36 ஆவது நினைவு தினம்

முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 36 ஆவது நினைவு தின நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட தமிழரசு கட்சியின்

2▶

## 'பட்ஜட்'டைத் தோற்கடிக்க சஜித் அணியினர் வியூகம்

வரவு - செலவுத் திட்டத்தின் சில அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிப்பதற்கான முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபடும் எனத் தெரியவருகின்றது.

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதீட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.

2▶



# நல்லூரிலிருந்து கலாசாலை நோக்கி நடைபவனி ஆதீன முதல்வர் தொடக்கி வைத்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை சிறப்பிக்கும் நடைபவனி இன்று காலை 6.45 க்கு நல்லூர் ஆலயத்தின் பின்புறத்தில் உள்ள நல்லை ஆதீன வாயிலில் ஆரம்பமாகியது .

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசி வழங்கி நடைபவனியைத் தொடக்கி வைத்தார்.

முன்னாள் அதிபர்களான வே.கா.கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம், இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள், கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் வ.சி.குணசீலன் என பலர் நடைபவனியில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர்களும் நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்து கொண்டனர்

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடைபவனியின்போது ஆசிரியர்கள் ஞான விளக்குகள் என்பதனை சித்திரிக்கும் வகையில் மிகப்பெரிய விளக்கு ஒன்று வடிவமைக்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது.

## கடுமையான மின்னல் தாக்கம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது!

கடுமையான மின்னல் தாக்கம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த அறிவிப்பு இன்று இரவு 11.30 மணி வரை செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் பதுளை, கேகாலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும், இடியுடன் கூடிய மழை பெய் யும்போது அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம், அறிவித்துள்ளது. (04)

## வவுனியா - மன்னார் வீதி விபத்தில் பெண் மரணம்

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் பம்பைமடு இராணுவ முகாமுக்கு அருகில் இன்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா, குருக்கள்புதுக்குளத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் பம்பைமடு இராணுவ முகாமுக்கு அருகில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் வி.ஜெயந்தினி (வயது 45) என்பவர் பலியாகியுள்ளார். அவரின் மகன் விஜயரட்னம் சிவரோஜன் (வயது 22) காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ)

## 'பட்ஜட்'டைத் தோற்கடிக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னர் நவம்பர் 14 ஆம் திகதி இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் ஆரம்பமாகும். இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாகும். டிசம்பர் 13 ஆம் திகதி பாதீட்டின் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாதீட்டு விவாதத்தில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் தனித்தனியாக விவாதம் நடத்தப்படும்.

இதன்போது, மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ள அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் எதிரணி வாக்கெடுப்பைக் கோரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சக்தி அமைச்சு, விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு உட்பட மேலும் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்றிக்கொள்வதற்குச் சாதாரண பெரும்பான்மை (113) போதும் என்ற நிலையில், அதற்கான பலம் அரச தரப்பில் உள்ள நிலையில், இப்படியானதொரு முயற்சியில் ஈடுபடுவது ஏற்புடைய நடவடிக்கையா? என்ற கேள்வியும் எதிரணி தரப்பில் எழுந்துள்ளது.

ஆனால், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்த இதுவும் ஒரு நகர்வாக இருக்கும் எனச் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, பாதீட்டு விவாத காலப்பகுதியில் ஆளுங்கட்சியினரை கொழும்பிலேயே இருப்பதற்கான ஆலோசனை ஆளுந்தரப்பில் இருந்து விடுக்கப்படவுள்ளது. (அ)

## லெப்டினன்ட் மாலதியின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டில், தருமபுரம் பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட மண்டபத்தில் சிறந்த நடைபெற்றன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா மற்றும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

## இமினோகுளோபின் மருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, குறித்த மருந்துகளின் தாக்கம் காரணமாக உடல் ரீதியான பக்கவிளைவுகளையும் நோயாளர்கள் எதிர்கொண்டிருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (04)

## இலங்கை தனிப்பட்ட தரவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சான்றளிக்கப்பட்ட கணக்காய்வாளரும் தொழிநுட்ப முகாமைத்துவ நிபுணருமான பிம்சர செனவிரத்ன, பொறியியல் மற்றும் டிஜிட்டல் மூலோபாய நிபுணர் ஷெஹான் விஜேதிலக ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம். 19 மார்ச் 2022 ஆம் திகதி சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு இதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காகச் சட்டம் இயற்றிய முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.

21 ஜூலை 2023 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இதன் ஐந்தாவது பகுதியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம், கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம், அரசு நிறுவனங்கள், வங்கிகள், தகவல் தொடர்பாடல் செயல்பாடுகள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட நிறுவனங்களால் பொது மக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டமானது தனியுரிமைச் சட்டத்தின் உலகளாவிய முன்னேற்றத்திற்கும் அரசு மற்றும் தனியார் துறையின் டிஜிட்டல் மூலோபாயங்களுக்கும் அமைவாக மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

தேசிய டிஜிட்டல் மூலோபாயம் மற்றும் இலங்கையின் தனித்துவ டிஜிட்டல் அடையாள (SL-UDI) திட்டத்துடன் இணைந்து, முதலீட்டை ஈர்ப்பது மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த சுயாதீன மேற்பார்வைப் பொறிமுறையின் ஊடாக தனிப்பட்ட தரவுகளின் சரியான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில், பல்வேறு துறைகளில் உள்ள மேற்பார்வையாளர் தரப்பினர்களின் ஒத்துழைப்புடன் செயற்பட எதிர்பார்க்கப்படுகிறது. (04)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# நல்ல தலைவர்கள் இல்லாத சமூகம் மந்தைக் கூட்டத்துக்கு சமனாகும்

## கிழக்கின் கேடயம் - எஸ்.எம். சபீஸ்





(நூருல் ஹுதா உமர்)

“உலகில் ஆகக்கூடிய சம்பளம் யாருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்றால் அது பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்குத்தான் என்று நான் சொல்வேன். ஏன் என்றால் எமது குழந்தைகளின் ஆரம்பமே அங்கே தான் தொடங்குகிறது. அவர்கள் ஒரு ஆசிரியராக மாத்திரமல்லாமல், ஒரு தாயாக, ஒரு வைத்தியராக, ஒரு சமூக சேவகராக இருந்து எமது குழந்தைகளின் ஆரம்பத்தினை தொடக்கி வைக்கின்றார்கள்”, என கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கறைப்பற்று மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான, கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் சம்மேளன நிறைவேற்று சபை உறுப்பினருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

பாலமுனை ஹில்ப் சமூக சேவை மன்ற பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நிகழ்வில் பிரதம அதீதியாக எஸ்.எம்.சபீஸ் கலந்துகொண்டிருந்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், இங்கே போதை ஒழிப்புக்கான வினோத உடைப்போட்டியானது மற்றவைர்களைப் போன்று என்னையும் வியப்பில் ஆழ்த்தியது. இது சமூகத்துக்கு சொல்லும் ஒரு செய்தியாகும்.

போதையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக துடைத்தெறியாமல் நாம் நிலவுக்கு போவதைப்பற்றி சிந்திக்கமுடியாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வைத்தியராக, பொறியியலாளராக, சட்டத்தரணியாக, கணக்காளராக, வரவேண்டும் என்று பிரார்த்திப்பது போன்று நல்ல தலைவராகவும் வரவேண்டும் என பிரார்த்திக்க வேண்டும். நல்ல தலைவர்கள் இல்லாத சமூகம் மந்தைக் கூட்டத்துக்கு சமனாகும்.

உங்களுக்கு நல்ல சகோதரனாகவும் இந்த குழந்தைகளின் எதிர்காலத்தின்மீது கரிசனை கொண்டவர்களாகவும் நாங்கள் இருப்போம். எங்களுக்காவும் பிரார்த்தியுங்கள், எனவும் அவர் தெரிவித்தார்.

# இராமகிருஷ்ண மகாவித்தியாலய விபுலானந்த மணிமண்டபம் திறப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் மீளப் புனரமைக்கப்பட்ட விபுலானந்த மணிமண்டபம் நாளை புதன்கிழமை காலை அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபால தலைமையில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

கடந்த சில மாதங்களாக விபுலானந்தா மணி மண்டபம் பழுதடைந்த நிலையில் இருந்த வேளையில் கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க லண்டனில் வாழும் பாண்டிருப்பைச்சேர்ந்த திருமதி. வனிதா இராஜகுமார் சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபத்தை மீள அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

நாளை அதனை அவரின் தாயார் திருமதி பாக்கியம் கதிரமலை அவர்கள் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் முன்னிலையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவிருக்கிறார்.



# முதலைக்குடாவில் ஆசிரியர் தின விழா

முதலைக்குடா மகா வித்தியாலய ஆசிரியர் தின விழா இன்று அதிபர் வ.சுந்தரநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

**(படம் - வி.ரி. சகாதேவராஜா)**

# புலமைப்பரிசில் பரீட்சை அறிவுறுத்தல்கள்

ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளை நாளை நள்ளிரவின் பின்னர் நடத்தவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 2,888 பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளது. (04)





# ஆப்கானிஸ்தான் நிலநடுக்கம் மீட்புப் பணிகள் முன்னெடுப்பு

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளில் உயிருடன் சிக்கியிருக்கக் கூடியவர்களைத் தேடும் பணிகளில் தன்னார்வலர்களும் கிராமத்தினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அந்த நாட்டின் ஹெராத் நகருக்கு வடமேற்கே 40 கிலோமீற்றர் தொலைவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் சனிக்கிழமை ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவானது. அதைத் தொடாந்து, மூன்று முறை கடுமையான நிலநடுக்கங்களும், குறைந்த அளவிலான நில அதிாவுகளும் உணரப்பட்டன.

கடந்த 20 ஆண்டுகளில் அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கர நிலநடுக்கங்களில் இதுவும் ஒன்றாகும்.

நிலநடுக்கம் மற்றும் அதன் பின்னதிர்வுகளால் கட்டடங்கள் இடிந்து விழுந்து சுமார் 2,000 பேர் உயிரிழந்ததாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கத்தில் ஆறு கிராமங்கள் அடியோடு அழிந்துவிட்டதாகவும், இடிபாடுகளில் நூற்றுக்கணக்கானோர் புதையுண்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்தச் சூழலில், இடிபாடுகளுக்குள் உயிருடன் சிக்கியிருக்கக்கூடியவர்களைத் தேடும் பணிகளை உள்ளூா் வாசிகளும் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்துள்ள தன்னார்வலர்களும் நேற்று தீவிரமாக மேற்கொண்டனர்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்களை வாகனங்கள் மூலம் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு தன்னார்வலர்கள் கொண்டு சென்று விநியோகித்தனர்.

கிழக்கு ஆப்கானிஸ்தானின் மலைப் பிராந்தியத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சுமார் 1,000 பேர் உயிரிழந்து, 1,500 பேர் காயமடைந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது. (04)

# இஸ்ரேல் – பாலஸ்தீனப் போரினால் கச்சா எண்ணெய் விலை 5 வீதம் உயர்வு




இஸ்ரேல் - பாலஸ்தீனத்தின் காஸா படையினருக்கு இடையிலான போரால், கச்சா எண்ணெய் விலை 5 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனத் தரப்புகளுக்கு இடையேயான போரின் காரணமாக வாரத்தின் முதல் வணிக நாளான நேற்றுச் சரிவுடன் தொடங்கி சரிவுடனேயே முடிந்தது.

பங்குச்சந்தைகளில் நிலையற்ற தன்மை நிலவியதால், முதலீட்டாளர்கள் பெரும் இழப்பையே சந்தித்தனர். சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலையும் உயர்வுடன் நிறைவடைந்தது.

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை 4.18 டொலர் அல்லது 4.94 சதவீதம் உயர்ந்து, பரலுக்கு 88.76 டொலர்களாக விற்பனையானது.

உலக நாடுகளுக்கான உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு கச்சா எண்ணெய் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகிறது. ஆனால், அந்தப் பகுதிகளுக்குட்பட்ட, இஸ்ரேல் ராணுவம் - பாலஸ்தீன ஆதரவு பெற்ற காஸா எல்லையைச் சேர்ந்த ஹமாஸ் படையினருக்கு இடையேயான போரால் ஏற்றுமதியில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இதுவரை இல்லாத அளவுக்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளதால், கச்சா எண்ணெய்ச் சந்தையில் நிலையற்றத்தன்மை நிலவுகிறது. எனினும் ஈரான் வழக்கத்தை விட தனது உற்பத்தியை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளமையும் கவனிக்கத்தக்கது. (04)




# இந்தியர்களின் வங்கிக் கணக்கு விவரங்களை அரசாங்கத்துக்கு வழங்கியது சுவிஸ் வங்கி

சுவிஸ் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் இந்தியாவைச் சேர்ந்த தனிநபர்கள், நிறுவனங்கள், அறக்கட்டளைகள் குறித்த தகவல்கள் இந்திய அரசுக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் புகழ்பெற்ற வங்கிகளில் ஒன்றான சுவிஸ் வங்கி, தானியங்கித் தகவல் பரிமாற்ற ஏற்பாட்டின் அடிப்படையில் ஐந்தாவது முறையாக இந்திய அரசுடன் தனது வங்கியில் கணக்கு வைத்திருக்கும் இந்தியாவைச் சேர்ந்த தனிநபர்கள், நிறுவனங்கள், அறக்கட்டளைகள் சார்ந்த தகவல்களைப் பகிர்ந்துள்ளது.

தனி நபர்கள், நிறுவனங்கள், அறக்கட்டளைகள் சார்ந்த நூற்றுக்கணக்கான பொருளாதார கணக்குகள் அடங்கிய தகவல் இந்திய அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

அவர்கள் குறித்த பெயர், முகவரி, சார்ந்திருக்கும் நாடு, வருமானக் கணக்கு எண் உள்ளிட்ட தனிப்பட்ட அடையாளம், கணக்கு விவரங்கள், பொருளியல் தகவல்கள், கணக்கின் இருப்பு, மூலதன வருவாய் ஆகியன பகிரப்பட்டுள்ளன.

இந்தத் தகவல் பரிமாற்றத்தின் இரகசியத்தன்மை காரணமாக மொத்தப் பணத்தின் மதிப்புக் குறித்த தகவல்களை அதிகாரிகள் குறிப்பிடவில்லை.

வரி ஏய்ப்பு, கறுப்புப் பணப் பரிமாற்றம், தீவிரவாத நடவடிக்கைகளுக்குப் பணம் தவறான வழியில் செல்லுதல் போன்றவற்றைத் தடுக்க நடைபெறும் விசாரணைகளில் இந்தத் தகவல்கள் உதவிகரமாக இருக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்த பரிமாற்றத்தில் இந்தியா மட்டுமில்லாமல் உலகம் முழுவதும் இருக்கும் 104 நாடுகளுடன் 36 லட்சம் கணக்குகள் குறித்த தகவல்கள் சுவிஸ் வங்கியால் பகிரப்படுகின்றன. அடுத்த ஆண்டறிக்கை 2024 செப்டம்பரில் இந்தியாவுக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# இஸ்ரேலின் நடவடிக்கை கவலையளிக்கிறது ஐ.நா. பொதுச்செயலர் குட்டெரஸ் தெரிவிப்பு



காஸா முனையை முழுமையாக முற்றுகையிட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளமை கவலையளிக்கிறது, என ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'காஸாவின் மக்கள் தொகையில் 6 சதவீதம் பேர் (1,37,000) பேர் ஐ.நா. நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர். இஸ்ரேல் நடத்திய வான்வெளித் தாக்குதலால் பாடசாலைகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

காஸா முனையை முழுமையாக முற்றுகையிட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்திருப்பது எனக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு முன்பும் காஸாவில் மனிதநேயச் சூழல் மிகவும் மோசமாக இருந்தது. இஸ்ரேலின் இந்த முடிவு, அந்த நிலைமையை மிகவும் மோசமாக்கும்' என கவலை வெளியிட்டுள்ளார்.

# ஹமாஸ் படையினர் மீதான தாக்குதல்கள் இப்போதுதான் ஆரம்பம் – இஸ்ரேல் பிரதமர்



காஸா பகுதியில் ஹமாஸ் படையினர் மீதான தாக்குதல் தற்போதுதான் தொடங்கி உள்ளது, என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

போர் தொடங்கி மூன்றாவது நாளான நேற்று, தொலைக்காட்சியில் அவர் ஆற்றிய உரையில், 'ஹமாஸ் மீது மட்டும் தற்போதைக்கு தாக்குதலைத் தொடங்கி உள்ளோம். வரும் நாள்களில் எதிரிகளுக்கு நாங்கள் கொடுக்கும் பதிலடி பல தலைமுறைகளுக்கு எதிரொலிக்கும்' - என்று எச்சரித்திருந்தார். (04)

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வருடாந்த கிரிக்கெட் தொடர் நடைபெற்றது





(சியாத் எம். இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்த அதன் உறுப்பினர்களுக்கிடையிலான வருடாந்த கிரிக்கேட் தொடர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் டொக்டர். ஏ.ஜி.எம்.ஷயீ தலைமையில் அட்டாளைச்சேனை அஸ் ஸஹ்றா வித்தியாலய மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தீவிர சிகிச்சைப் பிரிவு, அலுவலக மற்றும் துணை மருத்துவ சேவைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பராமரிப்புப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, பொது வைத்தியப் பிரிவு என ஆறு அணிகள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட இத்தொடரில், குழு ஏ யிலிருந்து பராமரிப்பு பிரிவு, பொது வைத்திய பிரிவு ஆகிய இரு அணிகளையும் வீழ்த்தி அவசர சிகிச்சைப் பிரிவும், குழு பி யிலிருந்து தீவிர சிகிச்சை பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகிய இரு அணிகளையும் வீழ்த்தி அலுவலக மற்றும் துணை மருத்துவ சேவைப் பிரிவு அணியினரும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றனர்.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவசர சிகிச்சைப் பிரிவு அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 63 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அலுவலக மற்றும் துணை மருத்துவ சேவைப் பிரிவு அணியினர் 4.3 ஓவர்களில் 64 ஓட்டங்களைப் பெற்று தொடரின் சம்பியனாகினர்.

இச்சுற்றுப்போட்டித் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக டொக்டர் எம்.ஏ.சுஹைல் அஹமட்டும், இறுதிப் போட்டி மற்றும் தொடராட்ட நாயகனாக ஜே.எம்.இர்சாத்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப், அதிதிகளாக சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர். றிப்ஷான் ஜெமீல், சிறு பிள்ளை வைத்திய நிபுணர் டொக்டர். இன்பாக் லுதுப்டீன், கதிர்வியக்கவில் வைத்திய நிபுணர் டொக்டர். நிமேஷா, அரச மருத்துவ அதிகாரிகள் கிளை சங்கத்தின் செயலாளர் டொக்டர். ஏ.சீ. அப்துல் றசாக் மற்றும் சுகாதார தர பாதுகாப்பு பதில் பொறுப்பு வைத்தியர் டொக்டர். எம்.எச்.எம்.சனூபர், தாதிய பரிபாலகர் பி.ரி. நௌபர், நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எம்.ஏ.சீ. நகீப் ஆகியோரும், ஏனைய வைத்தியர்கள், ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உலக உளநல தினத்தை முன்னிட்டு கல்முனையில் நேற்று செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

ஒக்டோபர் 10 ஆம் திகதி அனுட்டிக்கப்படும் உலக உளநல தினத்தினை முன்னிட்டு, கல்முனை பிராந்திய உளநலப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட "உலக உளநல தினம் 2023" தொடர்பான செயலமர்வு நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல் அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

உளநலம் என்பது ஓர் உலகளாவிய மனித உரிமை - " எமது உள்ளம், எமது உரிமைகள்" எனும் தலைப்பில் கல்முனை பிராந்திய உளநலப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல் இதன்போது விரிவுரை நிகழ்த்தினார்.




# மரங்களை வெட்டி அகற்ற பொதுமக்கள் கோரிக்கை



(எம்.ஏ.றமீஸ்)

பாலமுனை பிரதான வீதியின் அருகில் உள்ள இரு பெரும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துமாறு பல முறை கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பது தமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய காரியாலயத்திற்கு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பல முறை இவ்விடயம் தொடர்பில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இம்மரங்கள் இதுவரை வெட்டப்பட்டு அப்புறப் படுத்தப்பட வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளின் பிரதான வீதிகளில் இருந்த பெரு மரங்கள் வீழ்ந்து உயிர்ப்பலி உள்ளிட்ட பல்வேறான சேதங்கள் இடம்பெற்று வரும் இக்காலப் பகுதியில், கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக பாலமுனை பிரதான வீதியின் அருகில் விசாலமாய் வளர்ந்து, தற்போது இலைகள் கொட்டப்பட்டு, இறக்கும் நிலையில காட்சி தரும் இப்பெரு மரங்களின் வேர்கள் வியாபித்து வளர்ந்துள்ளதனால் இதற்கு அருகில் உள்ள கட்டடங்கள் சிலவற்றின் பாகங்களுக்குச் சேதம் ஏற்பட்டு வருவதாகவும் அதன் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சீரற்ற காலநிலை காரணமாக பாலமுனையினை அண்டிய ஒலுவில் பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தினால் ஒருவர் மரணித்ததுடன் மூவர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இப்பகுதியில் மாலை வேளையில் பலத்த காற்று வீசி வருவதனால் குறித்த இப்பெரு மரங்களை வெட்டி அகற்றி, மக்கள் நலனில் அக்கறை கொள்ளுமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட தாப்பினருக்குக் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ‘வீடியோ கேம்’ விளையாடும் பிள்ளைகள் வன்முறையில் நாட்டம் கொள்கின்றனர்



## உளவியல் மருத்துவ நிபுணர் ரூமி ரூபன்

தற்காலத்தில் சிறுவர்கள் வீடியோ கேம்களுக்கு அடிமையாகி வன்முறையாளர்களாக மாறியுள்ளதாக கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் உளவியல் மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார். இத னால் குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளதா கவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், ‘அநேகமான வீடுகளில் பெற்றோர்களும் வன்முறையாக நடந்து கொள் கிறார்கள். அதாவது, கணவன் - மனைவி இடையே சச்சரவுகளே இவ்வாறு வன்முறையாக வெளிப்படு கின்றன. இவற்றை நேரடியாக பார்க்கும் பிள்ளைகள் தாமும் வன்முறையில் ஈடுபட முயல்கின்றனர்.

மேலும், சமூக ஊடகங்கள், வீடியோ கேம்கள் மூல மும் பிள்ளைகள் வன்முறையைப் பார்க்கிறார்கள். அவற்றைப் பார்ப்பதன் மூலம் அவற்றையும் அவர்கள் பின்பற்றுகிறார்கள்.

எனவே, தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளில் பெற்றோர்கள் கவனமாக இருத்தல் வேண்டும். குறிப் பாக, கைப்பேசிகளை பயன்படுத்தும் விதம், பேசும் போது பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் பற்றி யும், அவர்கள் பழகும் நபர்களைப் பற்றியும் கவனமாக இருத்தல் வேண்டும் - என்றார். (ரெ-14)

## மாநாடு ஒத்தி வைப்பினால் ரூ. 11 கோடி வீண் விரயம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55 ஆவது வருடாந்த மாநாடு 2022 இல் இலங்கையில் நடைபெறாததால், மாநாட்டை நடத்துவதற்குத் தேவையான நடவடிக் கைகளை ஒழுங்கமைப்பதற்காக செலவிடப்பட்ட பதினொரு கோடியே ஐம்பத்திரெண்டு லட்சத்து அறு- பத்து நான்காயிரத்து அறுநூற்று பத்தொன்பது ரூபா (115,264,619) அரசாங்கத்தின் வீண் செலவுகளில் அடங்கிவிட்டது, என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டை அடுத்த வருடத்திற்கு ஒத்தி வைக்குமாறு கோரப்பட்டு, 2022 ஏப்ரல் 16ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன் கார ணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மாநாடு நடத்துவது தொடர்பாக அதுவரை செய்த செலவுகள் வீணாகிவிட்டதாகவும் கணக்காய்வில் தெரியவந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்கள் சபை இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்தது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2021ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்குத் தேவை யான பணிகளை ஒழுங்கமைக்க ஆசிய வளர்ச்சி வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் செலவுப் பகிர்வு ஒப்பந்தம் ஆகியனவற்றை இலங்கை செய்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெ-12)

## போதை மயக்கத்தால் ஜெனிவா மாநாட்டில் உரையாற்றத் தவறிய எதிர்க்கட்சி எம்.பிக்கள்


ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜெனிவா மனித உரி மைகள் மாநாட்டில் உரையாற்ற சென்றிருந்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருவர் முன்தினம் இரவு மது விருந்துபசார நிகழ்வொன்றில் கலந்து கொண்டதால் குறித்த மாநாட்டில் பேச முடியாத நிலைக்கு ஆளாகி யதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குருநாகல் மாவட்டம் மற்றும் புத்தளம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடந்த 5 ஆம் திகதி காலை 9.30 மற்றும் 10.10 மணிக்கு மாநாட்டில் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும், அவர்கள் இருவரும் மறுநாள் காலை 11.00 மணியளவில்தான் நித்திரையிலிருந்து எழுந் துள்ளனர்.

முதல் நாள் இரவு சூரிச்சில் தமது நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த விருந்துபசார நிகழ்வொன்றில் கலந்துகொண்டு போதை தலைக்கேறிய நிலையில் இருந்துள்ளனர். மறுநாள் இவ்வாறு தாமதித்து எழுந் தமையின் காரணமாகவே, ஜெனிவா மனித உரி மைகள் மாநாட்டில் உரிய நேரத்தில் உரையாற்ற முடியாத நிலைக்கு அவர்கள் ஆளாகியதாக குறித்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரெ-13)

## பேனா வடிவிலான போதையூட்டும் சிகரெட் மாணவர்களுக்கு ரகசியமாக விற்பனை?



போதைப்பொருள் விற்பனை பேர்வழிகள் போதைப் பொருள் அடங்கிய ஒருவகை கார்பன் பேனாவொன்றை விற்பனை செய்து பாடசாலை மாணவர்களை போதைப் பொருளுக்கு அடிமைப்படுத்தி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேனா வடிவில் காணப்பட்டாலும், அதனை அகற்றும் போது அதில் போதை கலந்த சிகரெட் இருந்ததாகவும், இது மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற் றுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

கடந்த 4ஆம் திகதியன்று தென்னிலங்கையின் காலி பிரதேசத்தை அண்மித்த பகுதியிலுள்ள ரியூஷன் வகுப் பொன்றில் இவ்வாறான பேனா ஒன்று கண்டுபிடிக்கப் பட்டதாகவும் இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ரெ - 17)

## கிரித்தலே ஏரியில் 66,000 மீன் குஞ்சுகள்

மீன் குஞ்சுகளை பெருகச்செய்யும் தேவைகளுக் காக பொலன்னறுவை மாவட்டத்தின் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றான கிரித்தலே ஏரியில் 66,000 மீன் குஞ்சுகளை விடுவிக்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.

வடமத்திய மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி மற்றும் மீன்பிடி அமைச்சினால் உள்ளூர் மக்களின் புரதச்சத்து தேவை மற்றும் மீனவர்களின் பொருளாதார நிலைமைகளை உயர்த்தல் ஆகியவற்றை கவனத் திற் கொண்டு தூரநோக்குடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு உரையாற்றிய வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், நாட்டுக்கு சோற்றை வழங்கும் விவசாயிகளை பெருமளவில் கொண்டுள்ள பொலன் னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்வாறான ஏரிகளில் மீன் குஞ்சுகளை வளர்ந்து பெருக விடுவது மக்களின் போசாக்கு நிலைக்கு பெரிதும் உதவுவதுடன் மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அது உறுதுணையாக அமையும் என்றார்.


நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், வடமத்திய மாகாண பிரதம செயலாளர் சந் திரசிறி பண்டார, விவசாய அமைச்சின் செயலாளர் விஜய வனசிங்க, அமைச்சின் அபிவிருத்தி அதிகாரி கள் உட்பட மீனவர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ரெ-15)

## தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 80,000 லஞ்சம் வாங்கிய நபர் கைது!

எண்பதாயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் விளையாட்டுத் துறை பிரிவின் மேற்பார்வையாளர் ஒருவர் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹப்புத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையில் நடத்துனர் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி எண்பதாயிரம் ரூபாவை சந்தேக நபர் கோரியதாகவும் இந்த லஞ்சப் பணத்தை கொழும்பு - பொரளை போக்குவரத்து தாரிப் பிடத்தில் வைத்து பெறும்போது கையும் களவுமாக கைது செய்யப்பட்டதுடன், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலை படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ரெ-16)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SEARCH NEAR VEHICLES
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk



# இலங்கை அணி அதிரடி ஆட்டம்!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியொன்றில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டுள்ளன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 34 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குசல் மெண்டிஸ் 77 பந்துகளில் 122 ஓட்டங்களையும், பத்தும் நிசங்க 51, சதீர சமரவிக்ரம ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2023இல் வெளியிடப்பெற்றது.